# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2019
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உயிர்மெய் எழுத்துகள் ______________ .

   ( 247, 216, 30 )

2. கிளித்தட்டில் முன்புறமிருந்து இறங்கும் கன்னையரைக் ______________ என்பர்.

   ( காய், கனி, பழம் )

3. அரங்கம் என்பது ______________ .

   ( காடு , வயல், மேடை )

4. இனிமையற்ற கடும் சொற்களைப் பேசுவது ______________ விரும்புவது போலாகும்.

   ( காயை, பழத்தை, விதையை )

5. தொல்காப்பியம் ஓர் ______________ .

   ( இலக்கணநூல், இலக்கியநூல், அறநூல் )

6. மழை பெய்துகொண்டிருந்தது. ______________ வானத்தில் வானவில் தோன்றியது.

   (அப்பொழுது, எப்பொழுது, இப்பொழுது)

7. பழமொழி:

   மன்னன் எவ்வழி மக்கள் ______________ .

   ( இவ்வழி, அவ்வழி, உவ்வழி )

8. மங்கல நிகழ்வுகளில் முதன்மையான இடத்தைப் பெறும் முழவு ________________ .

( முரசு, மேளம், உடுக்கு )

9. நெல்லில் இருந்து நீக்கப்படும் கழிவுப்பொருள் ____________ .

( அரிசி, உமி, மண் )

10. நீ சிரித்தாய். நீங்கள் ________________ .

( சிரிக்கின்றீர்கள், சிரித்தீர், சிரித்தீர்கள் )

11. மிளகுநீர்ச் சரக்குகளில் ஒன்று ________________ .

( மல்லி, ஏலம், கராம்பு )

12. முயற்சி உடையோர் ________________ வாழ்வர்.

( இகழ்ச்சியோடு, கவலையோடு, புகழோடு )

13. நொடி:

அந்தரத்தில் பறக்கும்; பறவை அல்ல. அழகான வால் உண்டு; அணிலும் அல்ல. அது என்ன?________________ .

( காகம், பட்டம், முயல் )

14. நீரை ________________ வகையாகப் பிரிக்கலாம்.

(நான்கு, மூன்று, இரண்டு )

15. எத்தனை வகையான வண்ணத்துப்பூச்சிகள். அவற்றுள் ________________ மிக அழகானவை.

( இவற்றுள், எப்பொழுது, ஒவ்வொன்றும் )

16. கேணி என்ற சொல் குறிப்பது ______________________ .

( கிணற்றை, கடலை, வாய்க்காலை )

17. இசை + கருவி என்பதைச் சேர்த்து எழுதினால்

______________________ .

( இசைகருவி, இசைக்கருவி, இசைய்க்கருவி )

18. வேப்பம் பூவில் இருந்து செய்யப்படும் உணவு ______________ .

( வடகம், முறுக்கு, அப்பளம் )

19. ஏதிலிகள் ஆற்றைக் ____________________ சென்றனர்.

( கடந்து, நடந்து, இருந்து )

20. தங்கை நேற்று விளையாடினாள். நாளை ________________ .

( விளையாடுகிறாள், விளையாடும், விளையாடுவாள் )

21. இராவணனது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் தலைநகர்

______________________ .

( இலங்கை, இந்தியா, சீனா )

22. தாமோதரம்பிள்ளை எழுதிய நூல்களில் ஒன்று

______________________ .

( மூதுரை, நாலடியார், நீதிநெறி விளக்கம் )

23. **குறள் :**

மருந்துஎன வேண்டாவாம் ________________ அருந்தியது

அற்றது போற்றி உணின்

( யாக்கைக்கு, வாழ்க்கைக்கு, காக்கைக்கு )

24. விழுதுகளை உடைய மரம் ________________ .

( மாமரம், பலாமரம், ஆலமரம் )

25. ஆதிக்குடியினர் கோதிய மரக்கோலில் இருந்து பிறக்கும் நாதத்தை ________________ என அழைத்தனர்.

( மண்ணின் ஓசை, விண்ணின் ஓசை, காற்றின் ஓசை )

26. **ஒலிவட்டு :**

இராவணனது தம்பி ________________ .

( இராமன், வாலி, வீடணன் )

27. உடற்பயிற்சி என்பதைப் பிரித்து எழுதினால் ________________ .

( உடல் + பயிற்சி, உடற் + பயிற்சி, உடற்ப் + பயிற்சி )

28. ________________ சிறந்த மருத்துவக்குணம் உடையது.

( மாங்கனி, நெல்லிக்கனி, பலாக்கனி )

29. 300 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

( முன்னூறு, முந்நூறு, முண்ணூறு )

30. நாய் குரைக்கும். அது போல் பாம்பு ________________ .

( பிளிறும், கத்தும், சீறும் )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| மேடும் பள்ளமுமாக | விடிய விடிய | பார்க்கப் பார்க்க |
| நற நற | ஓடஓட | |

1. கூத்துகள் முன் இரவு தொடங்கி ______________ நடைபெறும்.

2. இனியன் சினத்தினால் பற்களை ______________ என்று கடித்தான்.

3. மக்கள் கள்வனை ______________ விரட்டினர்.

4. அவர்கள் சென்ற பாதை ______________ இருந்தது.

5. பூக்களைப் ______________ ஆசையாக இருக்கிறது.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நேற்று மாணவன் தேர்வு ______________________________ .

2. **பழமொழி:**

   பதறாத காரியம் ______________________________ .

3. பறவைக் குஞ்சு பறந்து ______________________________ .

4. பாட்டி குழந்தையை அன்பாகக் கட்டி

   ______________________________ .

5. அங்காடியில் காய்கறிகளை ______________________________ .

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஆசிய நாடுகளில் வாழும் கரடிகள் கருமை நிறமும் சிறிய தோற்றமும் கொண்டவை. அவற்றின் கண்கள் மிகவும் சிறியனவாகவும் பார்க்கும் திறன் குறைந்தவையாகவும் இருக்கும். ஆனால், கரடிகள் முகர்ந்து அறியும் ஆற்றலைக் கொண்டவை. இவை 115 கிலோ வரையிலான நிறையை உடையவை. கரடிகள் இலைதழைகள், பழங்கள், இறைச்சி ஆகியவற்றை உண்கின்றன. அத்துடன் தேனையும் விரும்பிக் குடிக்கின்றன. கரடிகள் வேட்டையாடவும் எதிரிகளைத் தாக்கவும் தங்கள் கூரான உகிர்களைப் (நகம்) பயன்படுத்துகின்றன. ஆபிரிக்கா, அவுத்திரேலியாக் கண்டங்களில் கரடிகள் காணப்படுவதில்லை.

1. கருமை நிறமுடைய கரடிகள் எங்கே வாழ்கின்றன?

______________________________

2. கரடிகள் எத்தகைய ஆற்றலைக் கொண்டவை?

______________________________

3. கரடிகள் எதை விரும்பிக் குடிக்கின்றன?

______________________________

4. கரடிகள் தங்கள் உகிர்களை எதற்குப் பயன்படுத்துகின்றன?

______________________________

______________________________

5. எக்கண்டங்களில் கரடிகள் காணப்படுவதில்லை?

______________________________

புள்ளிகள் 10

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| மலர்க்கொத்தும் | பல்துலக்கி | கொடுத்தனர் |
| செயலை | போற்றும் | |

அம்மா அதிகாலையிலே எழுந்தார். ________________ முகம் கழுவினார். சமையலறையில் தன் வேலைகளைத் தொடங்கினார். அப்போது, அவரது பிள்ளைகளான கனியும் சேந்தனும் அங்கே வந்தனர். அவர்களுடைய கைகளில் ________________ ஒரு பொதியும் இருந்தன. இருவரும் புன்சிரிப்புடன் அம்மா அருகே வந்தனர். "உங்களுக்கு எங்களுடைய அன்பளிப்பு" என்று அவற்றைக் ________________. அம்மா திகைத்து நின்றார். "அம்மா இன்று தாயர் நாள். பிள்ளைகள் தங்கள் தாய்மாரைப் ________________ நாள். நாங்களும் எங்கள் அம்மாவுக்கு வாழ்த்துச் சொல்லிப் பரிசு தருகின்றோம்" என்றனர். அம்மா தனது பிள்ளைகளின் ________________ எண்ணி மகிழ்ந்தார்.

புள்ளிகள் 10

## 6) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. தாமோதரம்பிள்ளை எந்த ஊரில் பிறந்தார்?

2. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினங்கள் இரண்டு தருக.

3. இராவணனின் சிறப்புகள் பற்றிக் கூறும் நூல் எது?

4. கடல்நீரில் எது மிகுதியாகச் செறிந்துள்ளது?

5. தமிழரது எதிர்காலம் எதில் தங்கியுள்ளது?

புள்ளிகள் 10

## 7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| செய்த | பரந்து | வென்ற |
| வருகின்ற | நடத்த | |

1. ஓடி ____________________ வெள்ளத்தைத் தடுப்பதற்கு அணை கட்டினர்.

2. ஆலமரம் கூட்டம் ____________________மண்டபம் போல உதவிடும்.

3. தமிழர் பல நாடுகளில் ____________________ வாழ்கின்றனர்.

4. நாம் ஒருவர் ____________________ நன்றியை மறக்கக் கூடாது.

5. விளையாட்டில் ____________________ சிறுவனை மக்கள் பாராட்டினர்.

புள்ளிகள் 05

## 8) தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. மிதியுந்து ____________________

2. திருமணம் ____________________

3. இசை ____________________

4. அரசன் ____________________

5. அங்காடி ____________________

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.



ஒரு நாள் நிலவன் பள்ளிக்குச் செல்லும் வழியில்.........

புள்ளிகள் 15